1978 செப்டம்பர் 11]

யாக வேலை நடக்கவில்லை. ஆகவே, தாலுக்காவில் அல்லது அந்தந்த வட்டாரத்தில் அலுவலகமும், பணியாளர் குடியிருப்பும் கட்ட 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி செயல்படுத்தும் திட்டத்தை இந்த அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அலுவலர்கள் எல்லாம் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே குடியிருக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அலுவலர்களை— மாவட்ட அலுவலகம், வட்டார அலுவலகம் அல்லது பிர்க்கா அலுவலகம் போன்றவைகளில் பணியாற்றக்கூடியவர்களை அவர்கள் பணியாற்றும் அலுவலகத்திற்குப் பக்கத்திலே குடியிருக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்று அல்ல 10, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழக்கத்தின் காரணமாக பல்வேறு இடங்களிலிருந்து அலுவலகங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக மாற்ற முடியாது. இருந்த போதிலும் மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இடத்தைப் பொறுத்தவரையில் அரசுக்கு இருக்கும் நிதி வசதியைப் பொறுத்து ஒன்றன்பின் ஒன்றாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டிக் கொடுக்க இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Air-strip near Palani.

* Q. No. 131—THIRU S. GANESAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :—

(a) whether the Hindu Regligious and Charitable Endowments Administration has incurred expenditure for laying an air-strip near Palani during February-March, 1977; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரசுத்தரப்பு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள்.

* வினா எண் 132—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுத் தரப்பில் பிரச்சார நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துபவர்களை தேர்ந்தெடுக்கப் பின்பற்றப்படும் நடைமுறை விதிகள் யாவை ?

[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசின் சார்பாக நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான குழுக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கேட்டு தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்படி விண்ணப்பங்கள் நேரடியாக இயல் இசை, நாடக, மன்றச் செயலாளருக்கு வரப்பெற்றன. அவரது பரிந்துரைகளின் அடிப்படையில் நாடகக் குழுக்களின் பட்டியலை அரசு முடிவு செய்தது.

[முற்பகல் 9-20]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இதற்கு முந்தைய ஆட்சியிலே கூட அரசுத் தரப்பிலே பிரச்சார நாடகங்களை நடத்துபவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது புதிதாக உருவாகி இருக்கின்ற இந்த அரசு முந்தைய அரசு கொடுத்திருந்த அனுமதி ரத்து எதையேனும் செய்து விட்டதா? ஆமெனில் அதற்கான காரணம் என்ன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அனுமதி என்பது எப்போதுமே நிரந்தரமாக எந்தக் குழுக்களுக்கும் தரப்பட்டிருக்கவில்லை. அவ்வப்போதுதான் தேர்ந்தெடுக்கப்பட்டு தரப்படுகிறது. அந்த முறையிலே இப்போது பல்வேறு குழுக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்ததில் அவற்றைப் பரிசீலனை செய்து இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் 40 குழுக்களின் பெயர்களைத் தந்தார்கள். அவற்றில் 20 குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, அரசு தரப்பில் பிரச்சார நாடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு அதன் மூலம் இதுவரை எத்தனை நாடகங்கள் அனுமதி பெற்று இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு 20 குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, ஒரு குழுவுக்கு 5 நாடகங்கள் வீதம் 100 நாடகங்கள் அனுமதி பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த மாதிரி அரசுத் தரப்பிலே நடத்தப்படும்போது மதுவிலக்கு பிரச்சாரத்திற்காக பேரறிஞர் அண்ணா எழுதிய நல்லதம்பி, போன்ற கதைகள் பயன்படுத்தப்பட்டன. அது போன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இயற்றிய நாடகங்களை நமது அரசுத் தரப்பிலே நடத்துவதற்கு, நடித்துக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நிச்சயமாக அறிஞர் அண்ணாவினுடைய நாடகங்களில் இது போன்ற குறிப்பிட்ட கருத்துக்களைக் கொண்ட பிரச்சார நாடகங்கள் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலயங்களில் உயிர்ப்பலி

* வினு எண் 133—திரு என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்திலுள்ள சிறு சிறு கோவில்களில் சில முக்கிய நாட்களில் உயிர்ப்பலிகள் (ஆடு, மாடு, எருமை, கோழி) செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு?

(இ) அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) கோயில்களிலும், கோயில்களைச் சார்ந்த இடங்களிலும் உயிர்ப்பலி செய்யப் படுவதில்லை.

(ஆ) & (இ) வினுக்கள் எழவில்லை.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக நமது நாட்டிலுள்ள கிராமங்களில் பல கோயில்களில் பரவலாக இன்றையதினம் உயிர்ப்பலிகள் கொடுப்பது என்பது சர்வ சாதாரணமாக நடந்து கொண்டு வருகிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது அப்படி ஒன்றுமே இல்லை என்று சொல்கிறுர். இது நமக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கின்றது. ஆகவே இந்த உயிர்ப் பலி என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆடு, எருமை இன்னும் பல மிருகங்களைக் கொலை செய்யக் கூடிய நிலைமைகள் பல கோயில்களில் இருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோயிலில் அந்தமாதிரி நடைபெறுகிறது என்று குறிப்பிட்டு அமைச்சரிடத்திலே சொன்னல், அமைச்சர் நடவடிக்கை எடுப்பது குறித்து பதில் சொல்வார். ஆகவே குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, உயிர்ப்பலி இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனுல் உண்மையிலேயே உயிர்ப் பலி கொடுக்கப்படுகிறது என்பது மனசாட்சியைப் பொறுத்த